# தமிழர்தம் தெய்வ வழிபாடுகளும் குறியீடுகளும்

## பன்னாட்டுக் கருத்தரங்கம்



ஸ்ரீ கைலாஷ் மகளிர் கல்லூரி
தலைவாசல் - 636112

| | |
|---|---|
| Title: | தமிழர்தம் தெய்வ வழிபாடுகளும் குறியீடுகளும் |
| Editor's Name: | முனைவர் க.ப. ஸ்ரீதேவி<br>முனைவர் வி. செந்தில் ராணி |
| Published by: | Shanlax Publications,<br>Vasantha Nagar, Madurai – 625003,<br>Tamil Nadu, India |
| Publisher's Address: | 61, 66 T.P.K. Main Road,<br>Vasantha Nagar, Madurai – 625003,<br>Tamil Nadu, India |
| Printer's Details: | Shanlax Press, 66 T.P.K. Main Road,<br>Vasantha Nagar, Madurai – 625003,<br>Tamil Nadu, India |
| Edition Details (I,II,III): | I |
| ISBN: | 978-93-6163-025-5 |
| Month & Year: | August, 2024 |
| | |
|---|---|
| Copyright @ | முனைவர் க.ப. ஸ்ரீதேவி<br>முனைவர் வி. செந்தில் ராணி |
| | |
|---|---|
| Pages: | 280 |

| S. No. | Title | Page No. |
|---|---|---|
| 46 | ஐங்குறுநூற்றில் இயற்கை வழிபாடும் குறியீடும்<br>**முனைவர் து. வேணி & த. ரம்யா** | 217 |
| 47 | தமிழ் மாதங்களில் பழனிமலைத் திருவிழாக்கள்<br>**முனைவர் மு. இராதா** | 222 |
| 48 | தமிழர்தம் தெய்வம் வழிபாடுகளும் குறியீடுகளும்<br>**மு. பவித்ரா** | 230 |
| 49 | தமிழர்தம் தெய்வ வழிபாடுகளும் குறியீடுகளும்<br>**முனைவர் இரா. வசந்த்ரா தேவி** | 234 |
| 50 | சித்தர்களில் வழிபாடு<br>**முனைவர் வி. செந்தில் ராணி** | 239 |
| 51 | இயற்கை வழிபாடு<br>**முனைவர் ந. ஜெயசுதா** | 245 |
| 52 | தமிழ் முருகனிலிருந்து அறியலாகும் பௌத்த அடையாளங்கள்<br>**ச. தேவதிருவருள்** | 252 |
| 53 | Arulmiku Tanthonreeswarar Temple, Belur, Salem<br>**P. Nirosha** | 257 |
| 54 | Aarakalur Kamanatheeswarar Temple is Located Near Thalaivasal in Salem District<br>**T. Saritha** | 260 |

# இயற்கை வழிபாடு

**முனைவர் ந. ஜெயசுதா**
*தமிழ்த்துறைப்பேராசிரியர்*
*என்.ஜி.எம்.கல்லூரி, பொள்ளாச்சி*

**முன்னுரை:**

உலகம் தோன்றியது முதற்கொண்டு இன்று வரை மனிதன் இயற்கையோடு பயணித்து இணைந்தே வாழ்கின்றான். இயற்கை இறைவனின் இணையில்லா ஓவியமாகும். இயற்கையின் அழகே அழகு தான். அழகு ஆபத்தையும் தரும். இயற்கையைப் பகைக்கும் பொழுது தமக்குத் துன்பத்தைத்தருகிறது. துன்பம் தரும் பொழுது அதைக்கண்டு அஞ்சிப் பணிகிறோம். அவ்வாறே ஐம்பூத இயற்கையான நிலம், நீர், காற்று, வான், தீ என்பவற்றினால் ஏற்படும் நன்மை, தீமைகளை உணர்ந்த மக்கள் ஆதிகாலம் தொட்டு இவைகளை வழிபட ஆரம்பித்து இன்று வரை வழிபட்டும் வருகின்றனர். இவ்வழிபாட்டை இலக்கியங்கள் துணைகொண்டு ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**இயற்கை வழிபாடு:**

ஆதிகாலம் தொட்டு இக்காலம் வரை மனிதன் வழிபாட்டோடு தான் வாழ்ந்து வருகின்றான். இரவில் இருந்து எல்லா உயிர்களின் கண்களுக்கும் ஒளியைக் கொடுக்கும் சூரியன் முதற்கொண்டு, உலக உயிர்களின் உருத்தோற்றத்திற்குத் தேவையானவற்றை வழங்கும் இயற்கை அனைத்தையும் வழிபாடு செய்கின்றோம். இயற்கையின் பேரழிவுகளால் துன்பப்பட்ட மக்கள் தன் அறிவுக்கும் மேற்பட்ட ஆற்றல் இயற்கையிடம் உண்டுஎன்பதை உணர்ந்தனர். அன்றிலிருந்து ,யற்கையை வழிபட ஆரம்பித்தனர். உண்மையைச் சொல்லப் போனால் இயற்கை தான் இறைவன்.

மாணிக்கவாசகர் இறைவன் யார் என்பதற்கு அழகாகக் குறிப்பிடுகின்றார்.

*"வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி*
*ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்*
*கோனாகி அவரைக் கூத்தாட்டு*
*வூனாகி நின்றானை என் சொல்லி வாழ்த்துவனே"*

*(திருவாசகம் திருச்சதகம் 6)*

சுருக்கமாகச் சொன்னால் ஐம்பூதமாக இருப்பவனே இறைவன் என்கிறார். மேலும் இக்காலக் கவிஞர் கவிமணி,

*கோயில் முழுவதும் கண்டேன்- உயர்*
*கோபுரம் ஏறிக் கண்டேன்*
*தேவாதி தேவனை நான்-தோழி*
*தேடியும் கண்டிலேனே*
*தெப்பக்குளம் கண்டேன்-சுற்றித்*
*தேர் ஓடும் வீதி கண்டேன்*
*எய்ப்பில் வைப்போம் அவனைத்- தோழி*
*ஏழையான் கண்டிலனே"(கோவில் வழிபாடு)*

என்ற பாடலின் வழியே உலகில் உள்ள பல மதத்தினர் வழிபடும் உருவ வழிபாட்டில் இறைவன் என்பவன் யார்? என்ற வினாவை எழுப்புகின்றார். காரணம் இயற்கையே இறைவன் என்பதை உணர்த்துகின்றார்.வள்ளுவர்.

*"செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து*
*இயற்கை அறிந்துசெயல்" (திருக்குறள்.637)*

இககுறள் செயற்கையாய் எத்தகைய நூல்அறிவின் ஆற்றல் பெற்றிருந்தாலும் உலகத்தின் இயற்கையை அறிந்து அதனோடு பொருந்தி அச்செயல்களை செய்யவேண்டும் என்கிறார். எத்தகைய ஆற்றல் இருந்தாலும் இயற்கையின் தன்மைக்குத் தகுந்தாற்போல அறிவாற்றலை அமைத்துக்கொள்ள வேண்டும் என்கிறார். இயற்கையோடு இணைந்து தான் வாழ வேண்டும். அதனால் இயற்கையைத் தெய்வமாகப் போற்றினார்கள். இவ்வுலகில் உயிர் வாழ்வதே ஐம்பூதத்தின் துணையோடு வாழ்கின்றோம். அதனால் இயற்கையைத் தெய்வமாக வழிபட்டனர்.

**நிலம்**

இவ்வுலகில் பிறந்தது முதற்கொண்டு இறப்பது வரை பூமியின் மேற்பரப்பான நிலத்தின் மேல் தான் நடைபெறுகிறது. மண்ணுலகில் பிறந்து மண்ணின் மேல் விளைந்த பொருட்களை உண்டு, உடலை வளர்த்து வாழ்ந்து மண்ணோடு மண்ணாக மக்கிப்போகின்றோம். இந்த மண்ணில் பிறந்ததனால் தான் நம் நாட்டை தாய் மண் என்றும், தாய் நாடு என்றும் வழங்கிவருகின்றோம்.

திருவள்ளுவர்,

*"நிலத்தில் கிடந்தமை கால் காட்டும் காட்டும்*
*குலத்தில் பிறந்தார் வாய்ச்சொல்"(திருக்குறள் 959)*

இக்குறள், நிலத்தின் இயல்பை அதில் விளைந்த பயிர்கள் காட்டும். அதுபோல ஒருவரின் வாய்ச்சொல் கேட்டே அவர் எத்தகை குடியில் பிறந்தவர் என்பதை எடுத்துக்காட்டும் என்கிறார். இதில்





வள்ளுவர் நிலத்தின் தன்மையை விளக்க முற்படுகின்றார். பொதுவாக ஐந்து வகையான நிலத்தில் மண் பலவகைகள் உள்ளன. செம்மண், கரிசல்மண், வண்டல்மண், களிமண், என்றவாறு இன்னும் பல வகையுண்டு. ஒவ்வொரு நிலத்திற்கும் ஒவ்வொரு விதமான மண் உண்டு. ஒவ்வொரு மண்ணின் தன்மைக்குத் தகுந்தாற் போல விளைச்சல் மாறுபடுகின்றது. உற்பத்தியின் தன்மையும் மாறுபடுகின்றது. நல்ல விளைச்சல் வேண்டும் என்றால் நல்ல மண்வேண்டும் எனலாம்.

நிலத்தின் தன்மை மாறும் பொழுது சில நிலங்களில் பயிர்கள் விளைவதில்லை என்று சான்று பகர்கிறார். "வானின்று பொழியும் மழைநீர், சிறம், சுவையினறித் தூய்மையானது. வளிமண்டலத்திலுள்ள சிறிதளவு தழைச்சத்து (nitrogen) கலந்த மழைநீர் மண்துகள்களுடன் கலந்து மண்ணின் நிறத்தை அதாவது செந்நிறம் அல்லது கரிய நிறத்தை ஏற்கும். இதனுடன் மண்ணில் பொதிந்துள்ள காரப் பொருள்களான சுண்ணகக்கரிக்கன், சோடியக்கரிக்கன், அமிலப்பொருள், ஆகியவற்றுடன் கலந்து நீரின் வேதியியல் தன்மைகளும், இயற்பியல் தன்மைகளும் மாறிவிடும். ,தனால் உவர்மண், காரமண், உவர்க்காரமண், அமிலமண் என்பன தோன்றும். இம்மண்வகைகளில் உப்புச்டிசெறிவினால பயிர் வளர்ச்சி குன்றிவிடும் என்பது மண் அறிவியல் உண்மையாகும்." (பக்கம்.10. வள்ளுவத்தில் நீர் வளமும் வாழ்வியலும். கே.ஆர். திருவேங்கடசாமி) என்கிறார்.

நமக்குத் தெறிந்த மண்வகைகளில் மேற்சொன்ன மண்கள், ஐந்துநில அமைப்பிற்குத் தகுந்த வகையில் காணுகின்றோம். இதில் அறிவியல் பூர்வமாக மண்மாற்றங்களைக் குறிப்பிடுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இம்மண்களின் வளங்களுக்குத் தகுந்தாற் போல விளைச்சல்கள் விளைந்தன. நன்கு விளைந்ததற்கு நிலமகளான பூமாதேவிக்கு விளைச்சல் பயிர்களைப் படையலாக்கிப் படைத்து வழிபட்டோம். அதுமட்டுமல்லாமல் மண்ணில் உள்ள புழு பூச்சிகளுக்கு பச்சரிசியும் இனிப்பும் கலந்த கலவையை காட்டில் ஏகமாக இறைத்து வழிபட்ட பிறகே விளைச்சலை அறுவடை செய்தனர். இத்தகைய செயலைகட்டுரையாளர், இன்றும் கண்கூடாகப் பார்த்தும் அதைச் செய்தும் வருகின்றோம்.

**நீர்**

நீர் என்னும் இயற்கைச் சக்தியை திருவள்ளுவரின் வான் சிறப்பின் மூலமே தெறிந்துகொள்கிறோம். நீரை, வள்ளுவர் சிறப்பிப்பதற்கு பதிலாக வேறு யாரும் சிறப்பிக்க முடியாது.

*"நீர் இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்*
*வான்,ன்று அமையாது ஒழுக்கு"* (திருக்குறள்.20)

நீர் இல்லையென்றால் இவ்வுலகமே இல்லை என்பது உலகறிந்த உண்மையாகும். அதனால் நீரின் தேவையை உணர்ந்த மக்கள், பருவமழை பெய்யாது போனால் மழைக்கடவுளைப் பல்வேறு வகையில் வழிபாடு செய்துள்ளனர்.

சான்றாக, தினமலர் செய்தித்தாளில், "மேலூர் அருகே அரிட்டாபட்டியில் சில ஆண்டுகளாக மழையின்றி விவசாயம் நடக்கவில்லை. மழை பெய்து உலகம் செழிக்க வேண்டி நேற்று ஏழுமலை பாதுகாப்பு சங்க செயலர். ரவிச்சந்திரன் தலைமையில் மலைவாழ் மக்கள் விரதமிருந்துபட்டை முனியாண்டி சுவாமிக்கு சேவல் வெட்டி பொங்கல் வைத்து வழிபட்டனர். பின்னர் பாறையில் இழையின்றி சாப்பிட்டனர். இதைத்தொடர்ந்து நேற்று மாலை மழை பெய்தது.(தினமலர்). என்ற கருத்தில் இருந்து மழைவேண்டி விரதம் இருந்துள்ளனர் அதனால் மழையும் பெய்துள்ளது என்பதை அறியமுடிகின்றது. மேலும், பக்தி இலக்கியத்தில் திருஞானசம்பந்தர் அருளிய மழைவேண்டல் அதிகம் மழையில்லாக் காலத்தில் படித்தும், பாடியும் வேண்டியுள்ளனர்.

*"வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்*
*கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க.*
(கந்தபுராணம்.)

என்று தொடங்கும் பாடலைப் பாடிய மக்களின் எண்ணிக்கையை அளவிடமுடியாது. மேலும் நாட்டுப் புற மக்கள் மழை வேண்டி நம்பிக்கையின் அடிப்படையில் பல வழிபாட்டு முறைகளைப் பின்பற்றியுள்ளனர்.

கொடுபாவி கட்டியிழுத்தல், மழைச்சோறு, மழைக்கஞ்சி எடுத்தல் என்ற எல்லாம் இயற்கை தெய்வமான மழைக்காகத்தான். வேதாத்திரி மகரிஷியும் மழைக்காக உலகநல வாழ்த்து பாடியுள்ளார்.

*"உலகமெலாம் பருவமழை ஒத்தபடி பெய்யட்டும்*
*உழவரெலாம் தானியத்தை உவப்புடனே பெருக்கட்டும்"*
(உலகநல வாழ்த்து)

என்று துவங்கும் பாடல் மழையை வேண்டிப் பாடியதாகும். ஆக நம் முன்னோர்கள் காலத்தில் இருந்து இயற்கையைத் தெய்வமாக நம்பி போற்றிவணங்கி வேண்டி வழிபட்டுள்ளனர் என்பது புலனாகின்றது.





காற்று

உலக உயிர்கள் உயிர்ப்புடன் இருக்க முக்கியமானது காற்று. காற்றின்றி ஓர் அணுவும் அசையாது. உயிரினங்களின் உயிரே காற்று தான். காற்று மட்டும் வரவில்லையென்றால் உலக உயிர்களே இல்லை. காற்றின் முக்கியத்துவத்தை சுந்தராஜ்,

*"காற்று, உலகில் உள்ள அனைத்து*
*உயிரினங்களுக்கும் உயிரானவன்*
*உலகின் வெளி எங்கும் நிறைந்திருப்பதும்*
*உயிரினங்கள் உயிர்வாழ சுவாசிப்பதும்*
*உணரக்கூடியதுமான ஒன்று காற்று"* (பக்.71 ஐந்து மூலங்கள்)

பிரபஞ்சம் முழுமையும் நிறைந்திருப்பது காற்று தான். காற்றின் உதவியோடு தான் நம் வாய் வழியாக ஒலி பிறந்து எழுத்துக்கள் தோன்றுகின்றன

*"நிறையுயிர் முயற்சியினுள் உள்வளி துரப்ப*
*எழும் அணுத்திரல்கண்டம் உச்சி*
*மூக்குற்றிதழ் நாப்பல்லணத் தொழிலின்*
*வெவ்வேறெழுத்தொலி யாய் வரல் பிறப்பே"* (நன்னூல்.எழுத்து.74)

எழுத்துக்கள் பிறக்க காற்றின் உதவிதான் வேண்டும். உடல் நிரம்பிய உயிரின் முயற்சியால் உள்ளே நின்ற காற்றானது அணுத்திரலோடு மேலே எழுந்து மார்பும்,கழுத்தும்,தலையும் நாசியுமாகிய நான்கிடத்தையும் பொருந்தி ,தழ், உதடும் நாக்கும் பல்லும் மேல் வாயும் ஆகிய நான்கனுடைய முயற்சிகளால் வேறுவேறு எழுத்தாகிய ஓசைகளாய்த் தோன்றுதல் எழுத்து பிறப்பாகும்.

வள்ளுவர் காற்றைப் பற்றி

*ஏரின் உழாஅர் உழவர் புயல் என்னும்*
*வாரி வளங்குன்றிக் கால்* (திருக்குறள் 14)

காற்று புயல் காற்றாக மாறி வேகமாக வீசுவதன் மூலம் மழை பொழிகிறது. மழை பெய்யவில்லை என்றால் உழவர்கள் ஏரைப் பிடித்து உழவு செய்ய மாட்டார்கள் என்கிறார்.மழைக்கே காற்று தான் மூல காரணமாக விளங்குகின்றது. காற்றுப் பற்றி பழமொழியும் ஒன்றுண்டு,கடுங்காற்று மழையாகும் என்று நம் முன்னோர்கள் வழங்கி வரும் பழமொழியாகும். காற்று உயிர் வாழவும், உயிர்களின் உணவாகவும், உண்ணுவதற்கான பொருளின் வளர்ச்சியைத் தருவதும் காற்று தான். மேலும் காற்று நம் உடம்பில் குறைந்தாலும் அதிகமானாலும் நோய் வரும் என்கிறார் வள்ளுவர்,

*மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்*
*வளி முதலா எண்ணிய மூன்று* (திருக்குறள்.941)

உடலில் ரத்தம், வெப்பம், காற்று ஓட்டங்கள் சீராக இருந்தால் தான் நமது உடல் நன்றாக இருக்கும் என்கிறார். காற்றை வாயு தேவன் என்று வழிபாடு செய்கின்றோம். ஐம்பூதங்களில் முக்கியமானது காற்றுதான். இக்காற்றைப் பற்றி, காற்றின் வழியாக ஆகாய சக்தியாகிய பிராண சகதி உடலில் பரவி உடலை இயக்குகின்றது. காற்றின் வழியாக ஒளிமயமான தேயசக்தி உடலில் பரவி சரீரத்தில் வேலை செய்கிறது காற்றின் வழியாக அப்பு சக்தி சரீரத்தில் பரவி உடலில் இயங்குகிறது" (இணையம்) https://amzn.in/d/iKJtisE

**ஆகாயம்**

ஆகாயத்தின் எல்லையை யாராலும் இதுவரை அளக்க முடியவில்லை. முடியாது இது விஞ்ஞானத்தின் உண்மையாகும். வள்ளுவர்

***"வாழ்வார்க்கு வானம் பயத்தற்றல் வீழ்வார்க்கு***
***வீழ்வார் அளிக்கும் அளி" (திருக்குறள்.1192)***

உலகத்தவர்கள் எல்லாம் உயிர் வாழ்வதற்கு வானம் நன்மை செய்கின்றது. வானம் இல்லை என்றால் இப்பூமியே இல்லை. இப்பிரபஞ்சம் தான் வானம். வானத்தில் உள்ள அண்ட சராசர சக்தி அனைத்தும் இப்பூமிக்கு வானமே வழங்குகின்றது.

திருக்குறளின் வான் சிறப்பு வானத்தின் பெருமையைத் தான் போற்றுகின்றது. வானம் இல்லை என்றால் மற்ற பூதங்கள் எதுவுமே இல்லை எனலாம். ஆகாயம் வெற்றிடம் தான் ஆனால் அனைத்தும் நிறைந்துள்ளது

அண்டத்தில் உள்ளதே பிண்டத்தில் உள்ளது என்று சித்தர்கள் கூறுவார்கள் அண்டவெளியில் உள்ள ஆகாயத்தில் உள்ள அனைத்தும் மனித உடம்பில் அமைந்துள்ளது. ஆகாயத்துக்கு வெளி என்றொரு பெயரும் உண்டு பார்க்கும் இடம் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரிபூரண ஆனந்தமே என்று தாயுமானவர் சொல்வது போல ஆகாயம் எங்கும் நிறைந்துள்ளது. விஞ்ஞான வளர்ச்சியில் ஆகாயத்தின் துணை கொண்டு தான் அலைபேசியைப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றோம்.

நம் எண்ணங்களும் அப்படித்தான். எண்ணம் போல வாழ்க்கை என்பார்கள் எண்ணத்தின் அலைவரிசைக்கு அதிகமான சக்தி உண்டு. எண்ணங்களும் ஆகாயத்தில் பிரயாணம் செய்கின்றது. அதன் வழியாகத்தான் அன்றைய ஞானிகள் கூடுவிட்டு கூடுபாய்ந்தனர் எனலாம் இன்னும் சிலர் நான் நினைத்தேன் நீர் சொல்லிவிட்டீர் என்று சொல்வார்கள். இவ்வாறு வானம் நமக்கு அளப்பரியா சக்தியாக விளங்குகினறது.





நெருப்பு

ஐம்பூதங்களில் நெருப்பு நம் வாழ்வில் முக்கிய அங்கமாக இருக்கின்றது. நெருப்பு இன்றி ஆன்மீகம் கிடையாது, ஆன்மீகம் இன்றி மனித வாழ்க்கை இல்லை எனலாம். பொதுவாக வழிபாட்டில் உருவ வழிபாட்டை தவிர்த்து அருவமான ஜோதி வழிபாடு சிறப்பு என்று நெருப்பை வழிபாடு செய்கின்றோம். அந்நெருப்பைத் தீச்சட்டியாக்கி பூவோடு என்ற பெயரில் கையில் ஏந்தியும், காலால் பூ மிதித்தல் என்ற முறையில் தீ மிதித்தும் வழிபாடு செய்கின்றோம். தீ இல்லாமல் வேள்வியே கிடையாது. சிலப்பதிகாரத்தில் நெருப்புக் கடவுளிடம் கண்ணகி ஆணையிடுகின்றாள்

***"பார்ப்பார் அறவோர் பசு பத்தினிப் பெண்டிர்***
***மூத்தோர் குழவி எனும் இவரை கைவிட்டுத்***
***தீத்திறந்தார் பக்கமே சேர்க."***

பார்ப்பனர்களையும் அறவோரையும் பசுக்களையும் பத்தினிப் பெண்களையும் முதியவர்களையும் குழந்தைகளையும் விட்டுவிட்டு கெட்டவர்களைத் தீ எரிக்கட்டும் என்பதே கண்ணகி தீக்கடவுளுக்கு இட்ட ஆணையாகும். இதில் நெருப்புக்கடவுளை வழிபட்டு வந்தனர் என்பதற்கு சான்றாகிறது. வள்ளுவர் தீ குறித்து,

***"அகலாது அணுகாது தீக்காய்வார் போல***
***இகல்வேந்தர் சேர்ந்தார் ஒழுகுவார்" (திருக்குறள் 691)***

மன்னரைச் சேர்ந்து வாழ்பவர்கள் அவரை அதிகம் விலகாமலும் அதே நேரம் அதிகம் நெருங்காமலும் நெருப்பில் குளிர் காய்வது போல இருக்க வேண்டும் என்கிறார்

இவ்வாறு தமிழ் இலக்கியங்கள் இயற்கை வழிபாட்டை போற்றி வழிபட்டமையை அறியமுடிகின்றது.

Acknowledgement: would like to thank the Management of Nallamuthu Gounder Mahalingam College, Pollachi for financial assistance through SEED money support.